**நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டம் (உடன்படிக்கை இலக்கம் - 3409 எஸ்ஆர்ஐ) -2023**

---

நம்பகத்தன்மையான மின்சார வழங்கல் மேம்படுத்தலுக்கு உதவியளித்தல் செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 19 ஆம் திகதிய 3409-எஸ்ஆர்ஐ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மின்சார சபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. மின்சார வழங்கல் மற்றும் விநியோக முறைமைகளின் வினைத்திறன் மற்றும் நம்பகத்தன்மையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 24,228.15 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 160.20 மில்லியனானதுடன் அதில் ரூபா 17,392.24 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 115 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 6,835.91 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 45.2 மில்லியன் இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூன் 29 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டு. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2025 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்கள் மீது என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ADB கூற்றின் பிரகாரம், உள்ளபடியான கைதவிர்ப்புகள் அஇடொலர் 8.1 மில்லியனிற்கு சமமான ரூபா 2,560.2 மில்லியனா இருந்ததுடன் செயற்திட்ட முகாமைத்தவப் பிரிவால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அ.டொலர் 10.6 மில்லியனிற்கு சமமான ரூபா 3,239.9 மில்லியனாக இருந்தது. எவ்வாறாயினும் செயற்திட்டத்தால் வித்தியாசங்கள் இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கருத்திற்கொள்ளப்படும் போது முற்பணக்கணக்கின் மீளளிப்பு கவனயீனத்தால் இரட்டிப்பாக இருந்தது முற்பணக் கணக்கிலிருந்து நிர்வாக செலவினங்கள் PMU 7 இலிருந்து PMU 4 இற்கு மாற்றப்பட்டது. எவ்வாறாயினும் தனிப்பட்ட PMU பேரேட்டு பதிவேடுகள் அல்லது செயற்திட்ட நிதிக் கூற்றுக்களின் ADB கடன் மீதிகளில் தாக்கம் இருக்கவில்லை. திரண்ட கணக்குகள் மீதான தாக்கம் அடுத்த நிதிக்கூற்றுக்களில் திருத்தப்படும். கணக்காய்வு திருத்த பதிவுகன் CEB இற்காக அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | வித்தியாசங்களை அடையாளம் காண்பதற்கு இணக்கக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும் அதன் பின்னர் தவறுகள் திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 3,262.4 மில்லியன் தொகையான CEB பங்களிப்பு இறுதி மீதி குறிப்பு இல. 9 இன் கணப்பீட்டின் அடிப்படையில் நிதி நிலைமை கூற்றிற்கு எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இலங்கை மின்சார சபையின் (CEB) பங்களிப்பிற்காக புறம்பான பேரேடுகள் எதுவும் பேணப்பட்டிருக்கவில்லை. | பொதுப் பேரேட்டு மீளாய்வு நுழைவுகள் கணக்காய்வாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. CEB ஆனது GL பேணப்படுகின்றமையால் CEB இன் பங்களிப்பிற்காக புறம்பான பேரேடு பேணுவதற்கு எப்படி சாத்தியமக உள்ளது. மேலும் சகல நடைமுகைக் கணக்குகளும் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்ள் முடிவுறுத்துவதற்கு முன்னர் சமப்படுத்தப்படுகின்றது. குறிப்பு இல. 09 மேலும் அவசியமாயின் CEB பங்களிப்பின் விரிவான கணிப்பீடு வழங்க முடிந்தது. | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவால் புறம்பான பேரேட்டு கணக்குகள் பேணப்பட வேண்டும். |
| (இ) | இரூபா இற்குள் கட்டுநிதி மீதிகளின் (அ.டொலர் மீதி) பரிமாற்றங்களில் எழுந்த ரூபா 16.4 மில்லியன் தொகையான தேறிய வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் வெளிநாட்டு நாணய மாற்று இலாபமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | சகல வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் மற்றும் நட்டங்கள் 2023 ஆண்டின் பொது CEB இனுடைய வருமான கூற்றிற்கு சாட்டுதல் செய்யும் நொக்கில் செயற்திட்ட கிரய நிலையங்கள் AGM இற்கு மாற்றியிருந்தது. எனவே, அந்த வெளிநாட்டு நாணயமாற்ற இலாபம்/நட்டம் மூலதனமாக்க முடியாமையால் அவை இருக்கவில்லை. | வெளிநாட்டு நாணய மாற்று இலாபம் மீதி நிதி நிலைமையின் நிதிக்கூற்றில் முகப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிற்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| செயற்திட்ட நிர்வாக கைநூலின் 80 ஆம் பிரிவு | செயற்திட்ட நிர்வாக கைநூலின் 80 ஆம் பிரிவின் பிரகாரம் CEB அனது செயற்திட்ட இணைய தளமொன்றை பேணப்பட வேண்டும். அது ஒழுங்காக (i) கேள்வி நடைமுறை, கேள்வியாளர், ஒபபந்தம் வழங்ல், (ii) செயற்திட்டத்தின் கீழான நிதி கைதவிர்ப்பு பயன், (iii) பௌதீக முன்னேற்றம் என்பன உள்ளடக்கபட்டு நாளது வரையாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் மேறகுறித்த வேண்டுகைகள் அமுலாக்கல் முகவரால நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | கவனிக்கப்பட்டது. இது திருத்தப்படும் | செயற்திட்ட நிர்வாக கைநூலின் வேண்டுகையுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம்

| இல | கூறு /உபகூறு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு அவதானிப்பு | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப் பட்ட பௌதீக செயலாற்றல சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | |
| (அ) | **பொதி 4**<br>கோபுர வழி 33kV இன் 285 கிமீ நிர்மாணம் மற்றும் இரண்டு பரிவு தனி வழி பூஸ்ரர் கன்ரீஸ் 13 எண் | 100 | 64.7 (2024/03/31 அளவில் முன்னேற்றம்) | செயற்திட்டமானது 2019 மே 30 தொடங்கப்பட்டிருந்ததுடன் மொத்த ஒப்பந்த பெறுமதி ஐ.அ.டொலர் 40.48 மில்லியனாக இருந்தது. இந்த ஒப்பந்தத்தின் செயற்பாட்டு திகதி 2019 ஒக்தோபர் 28 ஆக உள்ளதுடன் ஒப்பந்த காலப்பகுதி 730 நாட்களாகும். பூர்த்தியாக்கல் திகதி 2021 ஒக்தோபர் 27 ஆக உள்ளது. ஆரம்ப பூர்த்தியாக்கல் திகதியிருந்து இரண்டு ஆண்டுகளிற்கு மேல் கடந்தரந்த போதிலும் செயற்திட்டமானது 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்படடிருக்கவில்லை | சுழற்சி அறிவிப்பின் புதிய தொழில்நுட்பம் காரணமாக சுழற்சி அடித்தளத்துடன் கோபுர வழிகளை நிர்மாணிப்பதில் கடினங்க்ள அனுபவமாக உள்ளது. கோபுர வழிகளின் நிர்மாணத்திற்காக மூன்றாம் தரப்பினரிடம் இருந்து ஆட்சேபனைகள் மற்றும் காணி விடயங்கள் தெளிவாக்கல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மூன்று தடவைகளிற்காக கால நீடிப்பு (EOT) வழங்கப் பட்டிருந்ததுடன் மூன்றாவது நுழுவு பிரகாரம் கடைசி பூர்த்தியாக்கல் திகதி 2024 செப்தெம்பர் 8 ஆக் இருந்தது. 2024 இன் 1 ஆவது காலாண்டு முன்னெற்ற அறிக்கை பிரகாரம் ஒப்பந்தத்தின் பௌதீக மன்னெற்றம் 65 சதவீதமாக இருந்ததுஇ கோவிட் நேய்தொற்று, பயணத் தடைகள், பொருள் வழங்குவதில் தாமதம், ஒப்பந்தகாரரின் மெதுவான செயலாற்றல் போன்றன தாமதங்களிற்காக பிரதான காரணங்களாக இருந்தன. | |

**முகாமைத்துவத்தின் பதில்**

மூன்றாம் தரப்பினரின் எதிர்ப்பு மற்றும் காணிச் சுவீகரப்பு பிரச்சனைகள் என்பவற்றின் தீர்வு PUCSL ஊடாக நிறைவேற்றப்பட்டது. ஒப்பந்தகாரர் கடன் திகதி காலாவதியாவதற்கு முன்னர் செயற்திட்ட பூர்த்தியாக்கலை மீளாய்வு செய்கையில் இடைக்கால திட்டம் தயாரிப்பதற்கும் இதன்படி வேலையை மேறகொள்வதற்கும் அறிவுறுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரரின் வேலைத்தள வேலைகயை நெருக்கமாக கண்காணிப்பதுடன் இடைக்கால திட்டத்துடன் உள்ளதென உறுதிப்படுத்த வேண்டும்.

**கணக்காய்வாளரின் பரிந்துரை**

வேலைகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரரை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும்.

(ஆ) **பொதி 7**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) லொட் A1: பன்னிபிட்டி உப மின்னிலையத்தில் 100MV/Ar BSC இன் பொருத்துதல் | 100 | 78.6 (2024/03/31 அளவில் (முன்னேற்றம்) | செயற்திட்டம் 2019 ஆகஸ்ட் 1 இல் தொடங்கப் பட்டிருநததுடன் ஆரம்பத்தில் 2021 சனவரி 21 இல் பூர்த்தியாக்கவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. கால நீடிப்பு (EOT) நான்கு தடவைகள் வழங்கப் பட்டிருந்ததுடன் நாலாவது EOT பிரகாரம் கடைசி பூர்த்தியாக்கல் திகதியயும் 2022 ஏப்ரல் 30 இல் உள்ளது. ஐந்தாவது EOT ஒப்பந்தகாரரால் வேண்டப்பட்ட விபரங்கள் சமர்ப்பிக்காமையால் இலங்கை மின்சார சபையால் நிராகரிக்கப் பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் கைதவிர்ப்புகள் இ.ரூபா 97.1 மில்லியன், ஐ.அ.டொலர் 1.34 மில்லயன் மற்றும் ஐ.அ.டொலர் 3.4 | தாமதங்களிற்கான காரணம் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை |

மில்லியனாக இருந்தது. ஆரம்ப பூர்த்தியாக்கல் திகதி மூன்று ஆண்டுகளை விட அதிகமாக கடந்திருந்த போதிலும் செயற்திட்டம் 2024 மார்ச் 05 இல் பூர்த்தியாக்கப்பட்டிருக்காததுடன் வேலைத்தள வேலைகள் 2023 ஒக்தோபர் 19 ஆந் திகதியிலிரந்து பிடித்துவைக்கப்ட்டது. இது மூன்று மாதங்களிற்கு அதிகமாக பிடித்து வைக்கப்பட்டது. 2024 இன் 1 ஆவது காலாண்டிற்கான முன்னேற்ற அறிக்கை பிரகாரம், பரீட்சாத்த தொடக்கலிலுள்ள தகராறு இன்னமும் தீர்க்கப் பட்டிருக்காததுடன் பொருத்தப்பட்ட கபாசிற்றரில் கசவுகள் கண்டு பிடிக்கப்பட்டது.

**முகாமைத்துவத்தின் பதில்** செயற்திட்டம் கால நீடிப்பு, பரீட்சிப்பு மற்றும் தொட்குதலிற்காக பொறுபபுடையவர்களின் பிரிவு மற்றும் வழங்கப்பட்ட இயலளவர்களின் இனங்காணப்பட்ட கசிவுகள் என்பவற்றில் ஒப்பந்த தகராறு காரணமான பிடித்து வைக்கப்பட்டது. 2024 சனவரியில் ஒப்பந்தகாரருடன் மீள தொடங்கப்பட்ட கலங்துரையாடல்களுடன் 2024 மார்ச் 1 இல் வேலைத்தள வேலைகள் மீள தொடங்கப்பட்டது. உற்ப்தியாளர்கள் இனங்காணப்பட்ட இயலளவு கசிவு மற்றும் 2024 யூன் 27 இல் வேலைத்தளத்தில் பெறப்பட்ட புதிய இயலளவாளர்கள் என்பவற்றிற்காக மாற்றியமைக்கும் இயலளவை வழங்குவதற்கு உடன்பட்டார். கால நீடிப்பு மீதான தகராறு மற்றும் தீர்வுகாணப்பட்ட பொறுப்பான பிரிவு மற்றும் 2024 திசெம்பர் 21 வரையும் வழங்கப்பட்ட கால நீடிப்பு, பரீட்சார்த்த தொடக்க வெலைகள் நடைமுறையில் உள்ளன.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** வேலைகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரரை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும்.

| | | |
|---|---|---|
| (ii) லொட் A3: 100 கொழும்புநகர உப பமின்நிலையத்தில் 124 MWar பிறேக்கர் சுவிச்யாட் கபாசிற்றர் மற்றும் துல்கிரிய உப மின்நிலையத்தில் மீளப்பொருத்தும் கபாசிற்றர் பாங்ஸ் | - | ஒப்பந்தம் 2022 மார்ச் 04 இல் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கை 2022 மார்ச் 30 இல் கைச்சாத்திடப் பட்டிருந்ததுடன் தொழிலாரம்பிப்பு முற்பணம் 2022 யூன் 10 இல் வழங்கப்பட்டது. பின்னர் ஒப்பந்தம் ஒப்பந்தகாரரால் 2023 யூலை 19 இல் இடைநிறுத்தப்பட்டது. தொழிலாரம்பிப்பு முற்பணங்களின் மீளளிப்பு 2023 ஆகஸ்ட் 08 மற்றும் |

| | | |
|---|---|---|
| | | 2023 ஆகஸ்ட் 23 இல் இருந்தன. இதன்படி ஒப்பந்தம் இடைநிறுத்தலின் தாமதம் காரணமாக ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்ட முற்பணம் சேகரிப்பதற்கு பதின்நான்கு மாதங்கள் (14) செலவழிக்கப்பட்டது. |

**முகாமைத்துவத்தின் பதில்** இந்த ஒப்பந்தம் இடைநிறுத்திய ஒரு மாதத்திற்குள் 2023 ஆகஸ்ட் அளவில் முற்பணம் அறவிடப்பட்டது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** வேலைகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரரை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும்.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கடன் உடன்படிக்கை பிரகாரம், கடன் (இல.3409 எஸ்ஆர்ஐ) செயற்படு திகதி 2017 யூன் 29 ஆக இருந்ததுடன் ஆரம்ப கடன் முடிவு திகதி 2022 மார்ச் 31 ஆக இருந்தது. பின்னர் கடன் இரண்டு தடவைகள் மூன்று ஆண்டுகளால் நீடிக்கப்பட்டிருந்ததுடன் புதிய கடன் முடிவுறுத்தல் திகதி 2025 மார்ச் 31 ஆக இருந்தது. கடைசி நீடிப்பு கடிதத்தின் பிரகாரம், கடன் ஒட்டு மொத்தமாக 36 மாதங்களால் நீடிக்கப்பட்டிருந்ததுடன் இது ADB ஆல் வழங்கப்பட்ட இறுதி நீடிப்பாக இருக்கும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு பொதி 4 7 லொட் A1 இன் தனிப்பட்ட நிதி முன்னேற்றம் முறையே 65 மற்றும் 78 சதவீதமாக இருந்ததுடன் நிதி முன்னேற்றம் முறையே 69 மற்றும் 74 சதவீதமாக இருந்தது. ஒப்பந்தத்தின் (12 மாதங்கள்) நீடிப்பு காலத்தின் மிகுதி காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்க வேண்டியிருந்த பொதி 4 இன் பௌதீக முன்னேற்றம் 35 சதவீதமாகவும் பொதி 7 லொட் A1 இன் பௌதீக முன்னேற்றம் 22 சதவீதமாகவும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.. | கடன் நீடிப்பு காலப் பகுதிக்குள் நிதிகள் முழுமையாக பயன்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. | வேலைகள் நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரரை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

### 3.3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கணக்கீட்டின் முறையான உளளக கட்டுப்பாட்டு முறைமையில் நிதிக்கூற்றுக்கள் தயாரித்த பின்னர் (அண்ணளவாக 02 மாதங்களிற்குள் நியாயமான காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட வேண்டும். 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2024 ஏப்ரல் 04 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | சேயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டின் பின்னர் பெப்ரவரி 28 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வெண்டியிருந்த நிறுவத்தினுடைய நியதிச்சட்ட நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் இருந்தன. எனவே, நாங்கள் 2024 பெப்ரவரி 28 இல் நியதிச்சட்ட நிதிக்கூற்றுக்களை பொல சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதேபோல அனுமதிக்கப்பட்ட செயற்திட்ட நிதிக்கூற்றுக்கள் 2024 ஏப்ரல் 04 அளவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. வரைவு அறிக்கைகள் மற்றும் ஏனைய பட்டடியல்கள் முறையாக கையொப்பமிட்டு சமர்ப்பிப்தற்கு முன்னர் கணக்காய்விற்காக எச்செல் வடிவத்தில் கணக்காய்வற்காக கிடைத்தருந்தது. குால்தை சேமிப்பதற்கு செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் அனுமதிக்கப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் தயாரித்த பின்னர் (அண்ணளவாக 02 மாதங்களிற்குள்) நியாயமான காலப் பகுதிக்குள் செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 3.4 காணிச் சுவீகரிப்பு தொடர்பான பிரச்சனைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்டத்தின் ஆரம்க கட்டத்தில் காணிச் சுவீகரிப்பு பூர்த்தியாக்கப்பட வேண்டிய போதிலும் 8 காணிகளின் சுவீகரிப்பு நடைமுறை 2023 திசெம்பர் 31 வரையும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவ கருத்துரை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி சுவீகரிக்கின்ற நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |